# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2241/36 - 2021 අගෝස්තු මස 18 වැනි බදාදා - 2021.08.18

*2241/36 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. பி. 51/ 53* (III)

**இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டம் (437 ஆம் அத்தியாயம்)**

*(437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் பெருந்தோட்ட அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரமேஷ் பத்திரன,**
பெருந்தோட்ட அமைச்சர்.

கொழும்பு,
*2021, ஓகத்து 06.*

**ஒழுங்குவிதிகள்**

*1.* இவ்வொழுங்குவிதிகள் 2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறப்பர் (மீள்நடுகை) மானிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*2.* (இதனகத்துப்பின்னர் ''அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்'' எனக் குறிப்பீடு செய்யப்படுபவரும்) ஏதேனும் காணியின் மீது இறப்பரின் மீள்நடுகைக்காக (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளவரான இறப்பர் தோட்டமொன்றின் இறப்பர் சிறுபற்று நிலமொன்றின் எவரேனும் உரிமையாளர், அத்தகைய தோட்டத்தில் அல்லது சிறுபற்று நிலத்தில் இறப்பர் கன்றுகளின் மீள்நடுகைக்கான மானியமொன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக இறப்பர் கட்டுப்பாட்டாளருக்கு எழுத்தில் விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்கலாம்.

*3.* இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் மானியமொன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

4. இறப்பர் கட்டுப்பாட்டாளர், அத்தகைய விண்ணப்பம் பெறப்பட்டதன்மேல், (437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இறப்பர் மீள்நடுகை மானிய நிதியத்திலிருந்தும் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் விண்ணப்பதாரருக்கு மானியமொன்றை வழங்கலாம்.

5. புறநீங்கலாகத் தனியார் சொத்தாண்மையில் உள்ளதாக 2019 ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பின்னரான காலம் தொடர்பில் ஓர் இறப்பர் தோட்டத்தின் அல்லது ஓர் இறப்பர் சிறுபற்றுநிலத்தின் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பாகத்தில் இறப்பரின் மீள்நடுகைக்காகச் செலுத்தப்படற்பாலதான மானியத் தொகையானது, இடப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் முந்நூற்றைம்பதாயிரம் ரூபாவாக (ரூ. 350,000) இருத்தல் வேண்டுமென்பதுடன் பின்வரும் முறையில் எட்டுத் தவணைப் பணங்களில் செலுத்தப்படுதலும் வேண்டும் :-

(அ) (i) மீள்நடுகை செய்யப்பட வேண்டிய ஓர் இடப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் பதினாறாயிரம் ரூபாவான (ரூ. 16,000) முதலாவது தவணைப்பணம், அத்தகைய இடப்பரப்பில் ஏலவேயுள்ள இறப்பர் மரங்களும் ஏனைய பயிரினங்களும் அடியோடு அழிக்கப்பட்ட பின்னர் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ii) அத்தகைய காணியின் மீது ஏலவேயுள்ள இறப்பர் மரங்களையும் ஏனைய பயிரினங்களையும் அடியோடு அழித்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதென அறிக்கப்பட்டதன் மீது இறப்பர் கட்டுப்பாட்டாளர், அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குப் பகுதியளவிலான கொடுப்பனவொன்றாக முதலாவது தவணைப் பணத்தின் ஐம்பது சதவீதத்தை (50%) விஞ்சாத தொகையொன்றைச் செலுத்தலாம் ;

(iii) இறப்பர் மீள்நடுகைக்கான குழிகளைத் தோண்டுதல் பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் மேலதிக ஊதியமொன்றை அனுப்புவதற்கான அதிகாரவளிப்பு அவசியமாகவுள்ளதென இறப்பர் கட்டுப்பாட்டாளர் கருதும்போது அவர் அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கலாம் ;

(ஆ) (i) ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் எண்பத்தாறாயிரம் ரூபாவான (ரூ. 86,000) இரண்டாவது தவணைப் பணம், மீள்நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ii) மீள்நடுகை பூர்த்திசெய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டதன் மீது இறப்பர் கட்டுப்பாட்டாளர், அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குப் பகுதியிளவிலான கொடுப்பனவொன்றாக இரண்டாவது தவணைப் பணத்தின் ஐம்பது சதவீதத்தை (50%) விஞ்சாத தொகையொன்றைக் கொடுப்பனவு செய்யலாம் ;

(iii) இரண்டாது தவணைப் பணத்தைக் கொடுப்பனவு செய்வதற்கான எல்லாத் தேவைப்பாடுகளும் பூர்த்திசெய்யப்படவில்லை என பரிசோதனையின் மீது காணப்படுமிடத்து, பின்வரும் செயற்பாடுகளைப் பின்வரும் முறையில் திருப்திகரமாகப் பூர்த்திசெய்ததன் பின்னர் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும் :-

| | பூர்த்திசெய்யப்பட வேண்டிய செயற்பாடுகள் | ஒரு ஹெக்டயாருக்கான மானியம் ரூ. ச. |
|---|---|---|
| 1. | குழிகளைத் தோண்டுதலும் ஒட்டவைக்கப்பட்ட இறப்பர் கன்றுகளை நடுதலும் | 50,000 |
| 2. | மண்பேணல் (வடிகால்களை அகழ்தல் அல்லது மேடைகளை அல்லது கல் படிக்கட்டுகளை நிர்மாணித்தல் அல்லது மூடு பயிர்களை நடுதல் முதலியன) | 20,000 |
| 3. | வேலியடைத்தல் | 16,000 ; |

(iv) ஏதேனும் மீதிப் பணத்தொகையின் கொடுப்பனவானது, கவனத்திலெடுக்கப்படாத செயற்பாடுகள் திருப்திகரமாகப் பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும் ;

(v) அத்தகைய தேவைப்பட்ட செயற்பாடு பூர்த்தி செய்யப்படும்வரை, அடுத்துப் பின்னரான தவணைப் பணங்களின் கொடுப்பனவு இடைநிறுத்தப்படுதல் வேண்டும் ;

(vi) இம்மானியத்துடன் சேர்த்து மேலதிகமாக, இறப்பர் கட்டுப்பாட்டாளர், இறப்பர் கன்றுகளுடன் விதந்துரைக்கப்பட்ட ஊடுபயிர்களை நடுவதற்காக மேலதிகக் கொடுப்பனவொன்றைச் செலுத்துவதற்கு அதிகாரமளிக்கலாம் ;

(இ) ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் முப்பதாயிரம் ரூபாவான (ரூ. 30,000) மூன்றாவது தவணைப்பணம், மீள்நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் இரண்டாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஈ) ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் நாற்பத்திரண்டாயிரம் ரூபாவான (ரூ. 42,000) நான்காவது தவணைப்பணம், மீள்நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் இரண்டாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(உ) ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் நாற்பத்திரண்டாயிரம் ரூபாவான (ரூ. 42,000) ஐந்தாவது தவணைப் பணம், மீள்நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் மூன்றாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஊ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் நாற்பத்திரண்டாயிரம் ரூபாவான (ரூ. 42,000) ஆறாவது தவணைப்பணம், மீள்நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் நான்காண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(எ) ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் நாற்பத்திநான்காயிரம் ரூபாவான (ரூ. 44,000) ஏழாவது தவணைப் பணம், மீள்நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் ஐந்தாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஏ) ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் நாற்பத்தெட்டாயிரம் ரூபாவான (ரூ. 48,000) எட்டாவது தவணைப்பணம், மீள்நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் ஆறாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும்.

6. ஒழுங்குவிதி 5 இன் பந்திகள் (இ) முதல் (ஏ) வரையில் குறித்துரைக்கப்பட்ட முன்னேற்றம் அவற்றின்கண் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிகளுக்கு முன்னர் எய்தப்பட்டுள்ளதென இறப்பர் கட்டுப்பாட்டாளர் திருப்திப்படுமிடத்து, இறப்பர் கட்டுப்பாட்டாளர் அவரது தற்றுணிபின் பேரில் குறிப்பிட்ட தவணைப்பணத்தை முந்தியவொரு திகதியில் விடுவிக்கலாம்.

7. ஒழுங்குவிதி 17 இன் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளுக்கிணங்கவல்லாது மானியத்தின் தவணைப் பணமெதுவும், அத்தகைய துப்புரவாக்கப்பட்ட காணியில் மீள்நடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அல்லது இறப்பர் பாலை வெட்டுதல் தொடங்கப்பட்ட பின்னர் ஏழாண்டுகளுக்குப் பிந்திச் செலுத்தப்படலாகாது.

8. ஒரு நிலத்தில் மரங்கள் எத்திகதியன்று நடப்பட்டனவோ அத்திகதி மீள்நடுகைத் திகதியாகக் கருதப்படுதல் வேண்டும்.

9. மீள்நடுகை செய்யப்பட வேண்டிய இடப்பரப்பு பரப்பளவில் இது ஹெக்டயாருக்குக் குறைவாகவுள்ளவிடத்து அல்லது அத்தகைய இடப்பரப்பு ஒரு ஹெக்டயாருக்குக் குறைவாகவுள்ள பாகமொன்றை உள்ளடக்குமிடத்து, இவ்வொழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி 5 இல் குறித்துரைக்கப்பட்ட தொகைகள், செலுத்தப்படற்பாலதான மானியத் தொகையைக் கணிக்கையில், அப்பரப்பளவு அல்லது இடப்பரப்பின் பாகம் ஒரு ஹெக்டயாருக்கு எந்த விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அந்த விகிதாசாரத்தில் அப்பரப்பளவு அல்லது பாகம் தொடர்பில் செலுத்தப்படுதல் வேண்டும்.

10. நிலத்துக்கு மேல் நூற்றிருபத்தொன்று தசம் ஒன்பது இரண்டு (121.92) சென்ரிமீற்றர் உயரத்தில், சுற்றுவட்ட எல்லையில் ஐம்பது தசம் எட்டு சைபர் (50.80) சென்ரி மீற்றர்களைக் கொண்ட குறைந்தபட்ச சுற்றளவை அடைந்துள்ளவையும், மீள்நடுகையிலிருந்து ஐந்தாவதாண்டின் முடிவில் ஒரு ஹெக்டயாருக்குத் தேவைப்பட்ட மரங்களின் எண்ணிக்கையிலிருந்து குறைந்தபட்சம் 2/ 3 பங்கினவான மரங்களைக் கொண்டவையுமான இறப்பர் தோட்டங்களை அல்லது சிறுபற்று நிலங்களை மீள் நடுகை செய்வதற்காக மற்றும் அப்பொருள்பட இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரிடமிருந்து சான்றிதழொன்றைப் பெற்றதன் மீது ஒரு ஹெக்டயாருக்குப் பதினான்காயிரம் ரூவாவான (ரூ. 14,000) ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்று செலுத்தப்படலாம்.

11. அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், மானியத் தவணைப் பணங்களைப் பெறுவதற்கும் மானியக் கொடுப்பனவுகளின் தவணைப் பணங்களிலிருந்து அறவீடுகளைச் செய்வதற்கும் என அரசாங்க வங்கியின் அல்லது ஏதேனும் தனியார் வர்த்தக வங்கியின் ஒரு கிளையில், ஒன்றில் நடப்புக் கணக்கொன்றை அல்லது சேமிப்புக் கணக்கொன்றைத் திறத்தலும் பேணுதலும் வேண்டும்.

12. ஒழுங்குவிதி 5 இன் கீழ் மானியத்தின் முதலாவது தவணைப் பணம் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குச் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், ஒழுங்குவிதி 19 இன்கீழ் எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கும் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் இணங்கியொழுகுவதும் மற்றும் மீள்நடுகை செய்யப்பட்ட இடப்பரப்பைச் சிறந்த கமத்தொழில்சார் நிலைமையில் பேணுவதும் அவரது கடமையாதல் வேண்டும்.

13. எந்தவோர் இடப்பரப்புக்காக மீள்நடுகை அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்தவோர் இடப்பரப்புத் தொடர்பில் ஒழுங்குவிதி 5 இன்கீழ் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மானியத் தவணைப் பணங்கள் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு வருமதியாகவுள்ளனவோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், இறப்பர் கட்டுப்பாட்டாளரின் எழுத்திலான அங்கீகாரமின்றி அத்தகைய இடப்பரப்பின் பாகத்தை அல்லது அது முழுவதனையும் விற்பனை செய்தலோ அல்லது வேறு வகையில் கையுதிர்த்தலோஆகாது.

14. ஒழுங்குவிதி 5 இன்கீழ் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு முதலாவது தவணைப்பணம் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், ஓராண்டினுள் அல்லது இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய மேலதிகக் காலத்தினுள் ஏலவேயுள்ள பயிரினங்களை அடிமையோடு அழித்துவிட்டு நடவேண்டிய இடப்பரப்பைத் துப்புரவாக்குதல் வேண்டுமென்பதுடன்-

(அ) இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய வகையை அல்லது வகைகளைச் சேர்ந்த இறப்பர் கன்றுகளுடன் அத்தகைய இடப்பரப்பின் மீள்நடுகையைப் பூர்த்திசெய்தலும் வேண்டும் ;

(ஆ) இறப்பர் கன்றுகளும் மற்றும் பயற்றின நெற்று நில மூடுகன்றுகளும் தவிர்ந்த எல்லாக் கன்றுகளையும் அத்தகைய இடப்பரப்பிலிருந்து அகற்றும்படி இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் எழுத்திலான அறிவித்தல் மூலம் தேவைப்படுத்தப்படும்போது அவ்வாறு செய்தலும் வேண்டும் ;

(இ) எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய வடிகால்களை அல்லது படிக்கட்டுகளை அத்தகைய இடப்பரப்பில் நிர்மாணித்தலும் வேண்டும் ;

(ஈ) எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளர் தேவைப்படுத்தக்கூடியவறாக, அத்தகைய இடப்பரப்பில் பயற்றின நெற்று மூடுபயிர்களை நடுதலும் வேண்டும் அல்லது அத்தகைய இடப்பரப்பில் மண் அரிவைத் தடுப்பதற்காகத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய வேறு வழிமுறைகளை எடுத்தலும் வேண்டும் ; அத்துடன்

(உ) அத்தகைய இடப்பரப்பைச் சுற்றி வேலியொன்றை நிர்மாணிக்கும்படி இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் எழுத்திலான அறிவித்தல் மூலம் கோரப்படின் அவ்வாறு செய்தலும் வேண்டும்.

15. (1) ஒழுங்குவிதி 14 இல் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் வேலையானது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரினால் நிறைவேற்றப்படாதிருக்குமிடத்து, அத்தகைய வேலையைப் பூர்த்திசெய்வதற்கு அவசியமென இறப்பர் கட்டுப்பாட்டாளர் தொழிலுக்கமர்த்தலாம் மற்றும் தேவைப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தலாம்.

(2) இறப்பர் கட்டுப்பாட்டாளர், அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குச் செலுத்தப்படற்பாலனவான மானியங்களிலிருந்து அது சம்பந்தமாக ஏற்பட்ட செலவுகளைக் கழித்தல் வேண்டும்.

16. ஒரு காணிப்பரப்புத் தொடர்பில் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் பகுதியொன்று செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், அந்த இடப்பரப்பிலுள்ள ஒவ்வொரு ஹெக்டயாரிலும் மீள்நடுகை செய்யப்படவுள்ள இறப்பர் கன்றுகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை பின்வரும் தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுகுதல் வேண்டுமென்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும் :-

(அ) (i) (இதனகத்துப்பின்னர் "இஇஆநி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தின் RRIC, RRISL வகையினவான இறப்பர் குளோன்களுடனும் மற்றும் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அங்கீகரிக்கப்பட்ட அதிக அறுவடை தரும் ஏனைய ஒட்டுரக இறப்பர் கன்றுகளின் வகைகளுடனும் நடப்படின், மீள்நடுகை செய்யப்பட்ட நேரத்தில் ஒரு ஹெக்டாயருக்கு 516 கன்றுகள் ;

(ii) மீள்நடுகைக்குப் பின்னர் முதலாவது மற்றும் இரண்டாவது ஆண்டுகளின் முடிவில் ஒரு ஹெக்டயாருக்கு 516 கன்றுகள் ;

(iii) மீள்நடுகைக்குப் பின்னர் மூன்றாவது மற்றும் நான்காவது ஆண்டுகளின் முடிவில் ஒரு ஹெக்டயாருக்கு 475 கன்றுகள் ;

(iv) மீள்நடுகைக்குப் பின்னர் அடுத்த இரண்டு தொடர்ச்சியான ஆண்டுகளுக்காக ஒரு ஹெக்டயாருக்கு 450 கன்றுகள் ;

(v) ஒழுங்குவிதி 17 இன் (ஆ) என்னும் பந்தி தொடர்பாக மீள்நடுகைக்குப் பின்னர் அடுத்த மூன்று தொடர்ச்சியான ஆண்டுகளுக்காக ஒரு ஹெக்டயாருக்கு 450 கன்றுகள்.

(ஆ) ஒட்டவைக்கப்பட்ட இறப்பர் கன்றுகள் பின்வரும் தூரங்களிலும் குறித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையினவான கன்றுகளுடனும் பின்வருமாறு நடப்படுதல் வேண்டும் :-

(i) RRIC, RRISL வகையினவானவையும் மற்றும் அதிக அறுவடை தருபவையுமான ஏனைய குளோன்களைப் பயிரிடுவதற்காக :-

| கன்றுகளுக்கிடையேயான இடைவெளி | கன்றுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 350 செமீ x 550 செமீ (11'6" x 18') | ஒரு ஹெக்டயாருக்கு 516 (ஓர் ஏக்கருக்கு 209) |
| 430 செமீ x 450 செமீ (14' x 14'9") | ஒரு ஹெக்டயாருக்கு 516 (ஓர் ஏக்கருக்கு 209) |

(ii) RRIC, RRISL வகையினவான குளோன்களுடனும் மற்றும் அதிக அறுவடை தருபவையுமான ஏனைய குளோன்களுடனும் ஊடுபயிர்களைப் பயிரிடுவதற்காக :-

| கன்றுகளுக்கிடையேயான இடைவெளி | கன்றுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 250 செமீ x 775 செமீ (8' x 26') | ஒரு ஹெக்டயாருக்கு 516 (ஓர் ஏக்கருக்கு 209) |

(இ) இறப்பர் கட்டுப்பாட்டாளர், காணியின் இடத் தன்மையைக் கவனத்துட்கொண்டு, மேலே விதிக்கப்பட்டவை தவிர்ந்த வேறுபடத்தக்க இடைவெளிகளில் நடுவதற்கு அதிகாரமளிக்கலாம்.

ஆயின், கன்றுகளுக்கிடையேயான குறைந்தபட்ச இடைவெளி, இவ்வொழுங்குவிதியின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம், (ii) ஆம் உட்பந்திகளில் விதிக்கப்பட்ட எண்ணிக்கைகளுக்கு இசைந்தொழுகுதல் வேண்டும்.

17. ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு ஒரு மானியம் அல்லது அதன் ஏதேனும் பகுதி செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், நிலத்துக்கு மேல் 121.92 சென்ரிமீற்றர் உயரத்தில், அத்தகைய இடப்பரப்பில் மீள்நடுகை செய்யப்பட்ட இறப்பர் கன்றுகளின் குறைந்தபட்ச சுற்றுவட்ட எல்லையைக் கொண்ட இறப்பர் கன்றுகள் பின்வருமாறிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுப்பது அவரது கடமையாதல் வேண்டும் :-

(அ) அத்தகைய இடப்பரப்பு 254 சென்ரிமீற்றர்களும் அதற்கு மேற்பட்டதுமான சராசரி வருடாந்த மழை வீழ்ச்சியைக் கொண்ட ஒரு மாவட்டத்தில் அமைந்திருக்குமிடத்து கீழே பட்டியல் I இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும் :-

பட்டியல் I

| பெருந்தோட்டம் உளதாயுள்ள காலம் | சுற்றளவு (செமீ) |
|---|---|
| மீள்நடுகைக்குப் பின்னர் இரண்டாவது ஆண்டின் முடிவில் | 10.16 |
| மீள்நடுகைக்குப் பின்னர் மூன்றாவது ஆண்டின் முடிவில் | 15.87 |
| மீள்நடுகைக்குப் பின்னர் நான்காவது ஆண்டின் முடிவில் | 25.40 |
| மீள்நடுகைக்குப் பின்னர் ஐந்தாவது ஆண்டின் முடிவில் | 31.75 |
| மீள்நடுகைக்குப் பின்னர் ஏழாவது ஆண்டின் முடிவுக்குப் பிந்தாமல் | 50.80 |

(ஆ) அத்தகைய இடப்பரப்பு 254 சென்ரிமீற்றர்களுக்குக் குறைவான சராசரி வருடாந்த மழை வீழ்ச்சியைக் கொண்ட ஒரு மாவட்டத்தில் அமைந்திருக்குமிடத்து, கீழே பட்டியல் II இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும் :-

பட்டியல் II

| பெருந்தோட்டம் உளதாயுள்ள காலம் | சுற்றளவு (செமீ) |
|---|---|
| மீள்நடுகைக்குப் பின்னர் இரண்டாவது ஆண்டின் முடிவில் | 10.16 |
| மீள்நடுகைக்குப் பின்னர் மூன்றாவது ஆண்டின் முடிவில் | 13.97 |
| மீள்நடுகைக்குப் பின்னர் நான்காவது ஆண்டின் முடிவில் | 22.86 |
| மீள்நடுகைக்குப் பின்னர் ஐந்தாவது ஆண்டின் முடிவில் | 27.94 |
| மீள்நடுகைக்குப் பின்னர் எட்டாவது ஆண்டின் முடிவுக்குப் பிந்தாமல் | 50.80 |

18. ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில் ஒரு மானியத்தை முழுமையாக அல்லது அதன் ஏதேனும் பகுதியைப் பெறுகின்றவராகவுள்ள அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் எவரும், இறப்பர் கன்றுகளின் ஆகக்குறைந்தது அறுபது சதவீதமேனும் (60%) நிலத்திலிருந்து அளவிடும்போது நூற்றியிருபத்தொன்று தசம் ஒன்பது இரண்டு (121.92) சென்ரிமீற்றர் உயரத்தில் குறைந்தபட்சம் ஐம்பது தசம் எட்டு சைபர் (50.80) சென்ரிமீற்றர்களைக் கொண்ட சுற்றளவை அடையும்வரை ஏதேனும் இறப்பர் கன்றிலிருந்து பாலை வெட்டுதலோ அல்லது பாலை வெட்டச் செய்தலோ ஆகாது.

19. எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு ஒழுங்குவிதி 5 இன்கீழ் மானியமொன்று செலுத்தப்படற்பாலதாகவுள்ளவிடத்து அல்லது செலுத்தப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், இறப்பர் கட்டுப்பாட்டாளர் எழுத்திலான அறிவித்தல் மூலம் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் ஓர் இறப்பர் தோட்டத்தை அல்லது இறப்பர் சிறுபற்று நிலத்தைத் திருப்திகரமான முறையில் மீள்நடுவை செய்வதனை நிறைவேற்றும் நோக்கத்துக்கு அவசியமென இறப்பர் கட்டுப்பாட்டாளர் கருதுகின்றவாறான அத்தகைய பணிப்புகளுக்கும் தேவைப்பாடுகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

20. எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் ஏதேனும் பகுதி செலுத்தப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒழுங்குவிதிகள் 12, 13, 14, 15, 16, 17 அல்லது 18 என்பவற்றை மீறியுள்ளாரென இறப்பர் கட்டுப்பாட்டாளர் அபிப்பிராயப்படுமிடத்து, இறப்பர் கட்டுப்பாட்டாளர், எழுத்திலான அறிவித்தல் மூலம், ஒன்றில் உடனடியாக அல்லது அறிவித்தலிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள் ஓர் இடப்பரப்புத் தொடர்பில் அவரினால் செலுத்தப்பட்டுள்ள மானியத் தொகையை மீளளிக்கும்படி அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரைத் தேவைப்படுத்தலாமென்பதுடன், இவ்வொழுங்கு விதியின்கீழ் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் எவரும் அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறுதலுமாகாது.

21. (1) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் செலுத்தப்பட்ட மானியத்தை மீளச்செலுத்துவதற்கு எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் தவறும் போதெல்லாம், அத்தகைய பணத்தொகை, ஒரு சட்ட நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்று என்றாற்போன்று அறவிடப்படுதல் வேண்டும்.

(2) ஆளொருவர், மானியத்தின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைப் பணங்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அத்தகைய மானியத்தை மீளச்செலுத்துவதற்குத் தவறியுள்ளதுடன், ஓர் இறப்பர் தோட்டத்தை அல்லது இறப்பர் சிறுபற்று நிலத்தைக் கைவிட்டுள்ளாரென்ற பொருள்பட இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றைச் சமர்ப்பித்தலானது அத்தகைய நிகழ்வு பற்றி முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.

22. காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறாக 1953 ஆம் ஆண்டு ஒற்றோபர் 13 ஆந் திகதிய 10594 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இறப்பர் மீள்நடுகை மானிய ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், முறையே 2013, 2014, 2015, 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகள் தொடர்பில் வழங்கப்பட்ட எவையேனும் மீள்நடுகை அனுமதிப்பத்திரங்களின் மீது செலுத்தப்படற்பாலதான மானியத்தின் பின்வரும் தவணைப் பணங்கள் மற்றும் அத்தகைய அனுமதிப்பத்திரங்களின் மீது வருமதியாகவுள்ள எல்லாத் தவணைப் பணங்களும் இவ்வொழுங்குவிதிகள் நடைமுறையிலிருக்கும் நேரத்தில் செலுத்தப்பட்டிராதவிடத்து, அத்தகைய தவணைப் பணங்கள் பின்வரும் முறையில் ஒழுங்குவிதி 5 இல் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் செலுத்தப்படுதல் வேண்டும் :-

2013 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(ஏ) இன் நியதிகளின்படி எட்டாவது தவணைப்பணம் ;
2014 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(எ) இன் நியதிகளின்படி ஏழாவது தவணைப்பணத்திலிருந்து ;
2015 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(ஊ) இன் நியதிகளின்படி ஆறாவது தவணைப்பணத்திலிருந்து ;
2016 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(உ) இன் நியதிகளின்படி ஐந்தாவது தவணைப்பணத்திலிருந்து ;
2017 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(ஈ) இன் நியதிகளின்படி நான்காவது தவணைப்பணத்திலிருந்து ;
2018 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(இ) இன் நியதிகளின்படி மூன்றாவது தவணைப்பணத்திலிருந்து ;
2019 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(அ) மற்றும் 5(ஆ) இன் நியதிகளின்படி முதலாவது மற்றும் இரண்டாவது தவணைப்பணத்திலிருந்து.

23. இவ்வொழுங்குவிதிகளில் :-

"உரிமையாளர்" என்பது, (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"தோட்டம்" என்பது, (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"மீள்நடுகை" என்பது, (437 ஆம் அத்தியாயமான) இறப்பர் இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டத்தின் கீழான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"மீள்நடுகை அனுமதிப்பத்திரங்கள்" என்பது, (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரம் என்று பொருளாகும் ; அத்துடன்

"இறப்பர் கட்டுப்பாட்டாளர்" என்பது, (437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீள்நடுகை மானிச் சட்டத்தின் கீழான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

09-40/ 1

---

ச. வ. பி. 51/ 53 (III)

**இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டம் (437 ஆம் அத்தியாயம்)**

(437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் பெருந்தோட்ட அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**ரமேஷ் பத்திரன,**
பெருந்தோட்ட அமைச்சர்.

கொழும்பு,
2021, ஓகத்து 06.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2021 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறப்பர் (புதிய நடுகை) மானிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளவரான (இதனகத்துப்பின்னர் "அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இறப்பர் தோட்டமொன்றின் அல்லது இறப்பர் சிறுபற்று நிலமொன்றின் எவரேனும் உரிமையாளர், அத்தகைய தோட்டத்தில் அல்லது சிறுபற்று நிலத்தில் இறப்பர் கன்றுகளை முதற்றடவையாக நடுவதற்கான மானியமொன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக இறப்பர் கட்டுப்பாட்டாளருக்கு எழுத்தில் விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்கலாம்.

3. இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் மானியமொன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

4. இறப்பர் கட்டுப்பாட்டாளர், அத்தகைய விண்ணப்பம் பெறப்பட்டதன் மேல், (437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இறப்பர் மீள்நடுகை மானிய நிதியத்திலிருந்தும் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் விண்ணப்பதாரருக்கு மானியமொன்றை வழங்கலாம்.

5. புறநீங்கலாகத் தனியார் சொத்தாண்மையில் உள்ளதாக 2019 ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பின்னரான காலம் தொடர்பில் ஓர் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட புதிய நடுகை அனுமதிப்பத்திரங்களின் மீது ஓர் இறப்பர் தோட்டத்தின் அல்லது ஓர் இறப்பர் சிறுபற்றுநிலத்தின் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பாகத்தில் முதற்றடவையாக இறப்பரை நடுவதற்காகச் செலுத்தப்படற்பாலதான மானியத் தொகையானது, இடப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் முந்நூறாயிரம் ரூபாவாக (ரூ. 300,000) இருத்தல் வேண்டுமென்பதுடன் பின்வரும் முறையில் எட்டுத் தவணைப் பணங்களில் செலுத்தப்படுதலும் வேண்டும் :-

(அ) (i) புதிதாக நடுகை செய்யப்பட வேண்டிய அனுமதிக்கப்பட்ட இடப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் பன்னிரண்டாயிரம் ரூபாவான (ரூ. 12,000) முதலாவது தவணைப்பணம், அனுமதிக்கப்பட்ட இடப்பரப்பில் ஏலவேயுள்ள அனுமதிக்கப்பட்ட ஏனைய பயிரினங்கள் அடியோடு அழிக்கப்பட்ட பின்னரும் இறப்பர் கன்றுகளை நடுவதற்கான குழிகள் தோண்டப்பட்ட பின்னரும் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ii) நடுகைக்கான குழிகளைத் தோண்டுதல் பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் மேலதிக ஊதியமொன்றை அனுப்புவதற்கான அதிகாரவளிப்பு அவசியமாகவுள்ளதென இறப்பர் கட்டுப்பாட்டாளர் கருதும்போது அவர் அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கலாம் ;

(ஆ) (i) ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் எழுபத்திரண்டாயிரம் ரூபாவான (ரூ. 72,000) இரண்டாவது தவணைப் பணம், புதிய நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ii) புதிய நடுகை பூர்த்திசெய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டதன் மீது இறப்பர் கட்டுப்பாட்டாளர், அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குப் பகுதியிளவிலான கொடுப்பனவொன்றாக முதலாவது தவணைப் பணத்தின் ஐம்பது சதவீதத்தை (50%) விஞ்சாத தொகையொன்றைச் செலுத்தலாம் ;

(iii) அத்தகைய தவணைப் பணத்தைக் கொடுப்பனவு செய்வதற்கான தேவைப்பாடு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை என பரிசோதனையின் மீது காணப்படுமிடத்து, பின்வரும் செயற்பாடுகளைப் பின்வரும் முறையில் திருப்திகரமாகப் பூர்த்திசெய்ததன் பின்னர் அத்தகைய கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும் :-

| | பூர்த்திசெய்யப்பட வேண்டிய செயற்பாடுகள் | ஒரு ஹெக்டயாருக்கான மானியம் ரூ. ச. |
|---|---|---|
| 1. | குழிகளைத் தோண்டுதலும் ஒட்டவைக்கப்பட்ட இறப்பர் கன்றுகளை நடுதலும் | 40,000 |
| 2. | மண்பேணல் (வடிகால்களை அகழ்தல் அல்லது மேடைகளை அல்லது கல் படிக்கட்டுகளை நிர்மாணித்தல் அல்லது மூடு பயிர்களை நடுதல் முதலியன) | 16,000 |
| 3. | வேலியடைத்தல் | 16,000 |

(iv) ஏதேனும் மீதிப் பணத்தொகையின் கொடுப்பனவானது, கவனத்திலெடுக்கப்படாத செயற்பாடுகள் திருப்திகரமாகப் பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும் ;

(v) அத்தகைய தேவைப்பட்ட செயற்பாடு பூர்த்தி செய்யப்படும்வரை, அடுத்துப் பின்னரான தவணைப் பணங்களின் கொடுப்பனவு இடைநிறுத்தப்படுதல் வேண்டும் ;

(vi) இம்மானியத்துடன் சேர்த்து மேலதிகமாக, இறப்பர் கட்டுப்பாட்டாளர், இறப்பர் கன்றுகளுடன் விதந்துரைக்கப்பட்ட ஊடுபயிர்களை நடுவதற்காக மேலதிகக் கொடுப்பனவொன்றைச் செலுத்துவதற்கு அதிகாரமளிக்கலாம் ;

(இ) ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் இருபத்துநான்காயிரம் ரூபாவான (ரூ. 24,000) மூன்றாவது தவணைப்பணம், புதிய நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் ஓராண்டுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஈ) ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் முப்பத்தாறாயிரம் ரூபாவான (ரூ. 36,000) நான்காவது தவணைப்பணம், புதிய நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் இரண்டாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(உ) ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் முப்பத்தாறாயிரம் ரூபாவான (ரூ. 36,000) ஐந்தாவது தவணைப் பணம், புதிய நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் மூன்றாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஊ) ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் முப்பத்தாறாயிரம் ரூபாவான (ரூ. 36,000) ஆறாவது தவணைப்பணம், புதிய நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் நான்காண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(எ) ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் முப்பத்தெட்டாயிரம் ரூபாவான (ரூ. 38,000) ஏழாவது தவணைப் பணம், புதிய நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் ஐந்தாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஏ) ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் நாற்பத்தாறாயிரம் ரூபாவான (ரூ. 46,000) எட்டாவது தவணைப்பணம், புதிய நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் ஆறாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும்.

6. ஒழுங்குவிதி 5 இன் பந்திகள் (இ) முதல் (ஏ) வரையில் குறித்துரைக்கப்பட்ட முன்னேற்றம் அவற்றின்கண் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிகளுக்கு முன்னர் எய்தப்பட்டுள்ளதென இறப்பர் கட்டுப்பாட்டாளர் திருப்திப்படுமிடத்து, இறப்பர் கட்டுப்பாட்டாளர் அவரது தற்றுணிபின் பேரில் குறிப்பிட்ட தவணைப்பணத்தை முந்தியவொரு திகதியில் விடுவிக்கலாம்.

*7. ஒழுங்குவிதி 17 இன் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளுக்கிணங்கவல்லாது மானியத்தின் தவணைப் பணமெதுவும், அத்தகைய துப்புரவாக்கப்பட்ட காணியில் நடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அல்லது இறப்பர் பாலை வெட்டுதல் தொடங்கப்பட்ட பின்னர் ஏழாண்டுகளுக்குப் பிந்திச் செலுத்தப்படுதலாகாது.*

*8. ஒரு நிலத்தில் மரங்கள் எத்திகதியன்று நடப்பட்டனவோ அத்திகதி மீள்நடுகைத் திகதியாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*9. புதிய நடுகை செய்யப்பட வேண்டிய இடப்பரப்பு பரப்பளவில் ஒரு ஹெக்டயாருக்குக் குறைவாகவுள்ளவிடத்து அல்லது அத்தகைய இடப்பரப்பு ஒரு ஹெக்டயாருக்குக் குறைவாகவுள்ள பாகமொன்றை உள்ளடக்குமிடத்து, ஒழுங்குவிதி 5 இல் குறித்துரைக்கப்பட்ட தொகைகள், செலுத்தப்படற்பாலதான மானியத் தொகையைக் கணிக்கையில், அப்பரப்பளவு அல்லது இடப்பரப்பின் பாகம் ஒரு ஹெக்டயாருக்கு எந்த விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அந்த விகிதாசாரத்தில் அப்பரப்பளவு அல்லது பாகம் தொடர்பில் செலுத்தப்படுதல் வேண்டும்.*

*10. நிலத்துக்கு மேல் நூற்றியிருபத்தொன்று தசம் ஒன்பது இரண்டு (121.92) சென்ரிமீற்றர் உயரத்தில், சுற்றுவட்ட எல்லையில் ஐம்பது தசம் எட்டு சைபர் (50.80) சென்ரி மீற்றர்களைக் கொண்ட குறைந்தபட்ச சுற்றளவை அடைந்துள்ளவையும், நடுகையிலிருந்து ஐந்தாவதாண்டின் முடிவில் ஒரு ஹெக்டயாருக்குத் தேவைப்பட்ட மரங்களின் எண்ணிக்கையிலிருந்து குறைந்தபட்சம் 2/3 பங்கினவான மரங்களைக் கொண்டவையுமான இறப்பர் தோட்டங்களை அல்லது இறப்பர் சிறுபற்று நிலங்களை புதிதாக நடுகை செய்வதற்காக மற்றும் அப்பொருள்பட இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரிடமிருந்து சான்றிதழொன்றைப் பெற்றதன் மீது ஒரு ஹெக்டயாருக்குப் பதினான்காயிரம் ரூவாவான (ரூ. 14,000) ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்று செலுத்தப்படலாம்.*

*11. அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், மானியக் கொடுப்பனவுகளின் தவணைப் பணங்களைப் பெறுவதற்கும் மானியக் கொடுப்பனவுகளின் தவணைப் பணங்களிலிருந்து அறவீடுகளைச் செய்வதற்கும் என அரசாங்க வங்கியின் அல்லது ஏதேனும் தனியார் வர்த்தக வங்கியின் ஒரு கிளையில், ஒன்றில் நடப்புக் கணக்கொன்றை அல்லது சேமிப்புக் கணக்கொன்றைத் திறத்தலும் பேணுதலும் வேண்டும்.*

*12. ஒழுங்குவிதி 5 இன் கீழ் மானியத்தின் முதலாவது தவணைப் பணம் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குச் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், ஒழுங்குவிதி 19 இன்கீழ் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் எழுத்திலான அறிவித்தல் மூலம் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கும் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் இணங்கியொழுகுவதும் மற்றும் புதிதாக நடுகை செய்யப்பட்ட இடப்பரப்பைச் சிறந்த கமத்தொழில்சார் நிலைமையில் பேணுவதும் அவரது கடமையாதல் வேண்டும்.*

*13. எந்தவோர் இடப்பரப்புக்காக புதிய நடுகை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளனவோ அந்தவோர் இடப்பரப்புத் தொடர்பில் ஒழுங்குவிதி 5 இன்கீழ் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மானியத் தவணைப் பணங்கள் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு வருமதியாகவுள்ளனவோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், இறப்பர் கட்டுப்பாட்டாளரின் எழுத்திலான அங்கீகாரமின்றி அத்தகைய இடப்பரப்பின் பாகத்தை அல்லது அது முழுவதனையும் விற்பனை செய்தலோ அல்லது வேறு வகையில் கையுதிர்த்தலோ ஆகாது.*

*14. ஒழுங்குவிதி 5 இன்கீழ் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு முதலாவது தவணைப்பணம் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த ஓர் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், ஓராண்டினுள் அல்லது இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய மேலதிகக் காலத்தினுள் ஏலவேயுள்ள பயிரினங்களை அடியோடு அழித்துவிட்டு நடவேண்டிய இடப்பரப்பைத் துப்புரவாக்குதல் வேண்டுமென்பதுடன்-*

*(அ) இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய வகையை அல்லது வகைகளைச் சேர்ந்த இறப்பர் கன்றுகளுடன் அத்தகைய இடப்பரப்பின் நடுகையைப் பூர்த்திசெய்தலும் வேண்டும் ;*

*(ஆ) இறப்பர் கன்றுகளும் மற்றும் பயற்றின நெற்று நில மூடுகன்றுகளும் தவிர்ந்த எல்லாக் கன்றுகளையும் அத்தகைய இடப்பரப்பிலிருந்து அகற்றும்படி இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் எழுத்திலான அறிவித்தல் மூலம் தேவைப்படுத்தப்படும்போது அவ்வாறு செய்தலும் வேண்டும் ;*

*(இ) எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய வடிகால்களை அல்லது படிக்கட்டுகளை அத்தகைய இடப்பரப்பில் நிர்மாணித்தலும் வேண்டும் ;*

*(ஈ) எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளர் தேவைப்படுத்தக்கூடியவாறாக, அத்தகைய இடப்பரப்பில் பயற்றின நெற்று மூடுபயிர்களை நடுதலும் வேண்டும் அல்லது அத்தகைய இடப்பரப்பில் மண் அரிப்பைத் தடுப்பதற்காகத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய வேறு வழிமுறைகளை எடுத்தலும் வேண்டும் ; அத்துடன்*

(உ) அத்தகைய இடப்பரப்பைச் சுற்றி வேலியொன்றை நிர்மாணிக்கும்படி இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் எழுத்திலான அறிவித்தல் மூலம் கோரப்படின் அவ்வாறு செய்தலும் வேண்டும்.

15. (1) ஒழுங்குவிதி 14 இல் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் வேலையானது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரினால் நிறைவேற்றப்படாதிருக்குமிடத்து, அத்தகைய வேலையைப் பூர்த்திசெய்வதற்கு அவசியமென இறப்பர் கட்டுப்பாட்டாளர் கருதக்கூடியவாறான ஆட்களை தொழிலுக்கமர்த்தலாம் மற்றும் தேவைப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தலாம்.

(2) இறப்பர் கட்டுப்பாட்டாளர், அல்லது இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குச் செலுத்தப்படற்பாலனவான மானியங்களிலிருந்து அது சம்பந்தமாக ஏற்பட்ட செலவுகளை அறவிடுதல் வேண்டும்.

16. ஒரு காணிப்பரப்புத் தொடர்பில் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் பகுதியொன்று செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், அந்த இடப்பரப்பிலுள்ள ஒவ்வொரு ஹெக்டயாரிலும் நடுகை செய்யப்படவுள்ள இறப்பர் கன்றுகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை பின்வரும் தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுகுதல் வேண்டுமென்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும் :-

(அ) (i) (இதனகத்துப்பின்னர் "இஇஆநி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தின் RRIC, RRISL வகையினவான இறப்பர் குளோன்களுடனும் மற்றும் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அங்கீகரிக்கப்பட்ட அதிக அறுவடை தரும் ஏனைய ஒட்டுரக இறப்பர் கன்றுகளின் வகைகளுடனும் நடப்படின், நடுகை செய்யப்பட்ட நேரத்தில் ஒரு ஹெக்டாயருக்கு 516 கன்றுகள் ;

(ii) நடுகைக்குப் பின்னர் முதலாவது மற்றும் இரண்டாவது ஆண்டுகளின் முடிவில் ஒரு ஹெக்டயாருக்கு 516 கன்றுகள் ;

(iii) நடுகைக்குப் பின்னர் மூன்றாவது மற்றும் நான்காவது ஆண்டுகளின் முடிவில் ஒரு ஹெக்டயாருக்கு 475 கன்றுகள் ;

(iv) நடுகைக்குப் பின்னர் அடுத்த இரண்டு தொடர்ச்சியான ஆண்டுகளுக்காக ஒரு ஹெக்டயாருக்கு 450 கன்றுகள் ;

(v) ஒழுங்குவிதி 17 இன் (ஆ) என்னும் பந்தி தொடர்பாக மீள்நடுகைக்குப் பின்னர் அடுத்த மூன்று தொடர்ச்சியான ஆண்டுகளுக்காக ஒரு ஹெக்டயாருக்கு 450 கன்றுகள்.

(ஆ) ஒட்டவைக்கப்பட்ட இறப்பர் கன்றுகள் கீழே குறித்துரைக்கப்பட்ட தூரங்களிலும் குறித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையினவான கன்றுகளுடனும் பின்வருமாறு நடப்படுதல் வேண்டும் :-

(i) இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தின் (RRISL) வகையினவான குளோன்களையும் மற்றும் அதிக அறுவடை தருபவையுமான ஏனைய குளோன்களையும் பயிரிடுவதற்காக :-

| கன்றுகளுக்கிடையேயான இடைவெளி | கன்றுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 350 செமீ X 550 செமீ (11'6" X 18') | ஒரு ஹெக்டயாருக்கு 516 (ஓர் ஏக்கருக்கு 209) |
| 430 செமீ X 450 செமீ (14' X 14'9") | ஒரு ஹெக்டயாருக்கு 516 (ஓர் ஏக்கருக்கு 209) |

(ii) RRIC, RRISL வகையினவான குளோன்களுடனும் மற்றும் அதிக அறுவடை தருபவையுமான ஏனைய குளோன்களுடனும் ஊடுபயிர்களைப் பயிரிடுவதற்காக :-

| கன்றுகளுக்கிடையேயான இடைவெளி | கன்றுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 250 செமீ X 775 செமீ (8' X 26') | ஒரு ஹெக்டயாருக்கு 516 (ஓர் ஏக்கருக்கு 209) |

(இ) இறப்பர் கட்டுப்பாட்டாளர், காணியின் இடத் தன்மையைக் கவனத்துட்கொண்டு, மேலே விதிக்கப்பட்டவை தவிர்ந்த வேறுபடத்தக்க இடைவெளிகளில் நடுவதற்கு அதிகாரமளிக்கலாம்.

ஆயின், கன்றுகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம், (ii) ஆம் உட்பந்திகளில் விதிக்கப்பட்ட எண்ணிக்கைகளுக்குக் குறைவாகவிருத்தலாகாது.

17. ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு ஒரு மானியம் அல்லது அதன் ஏதேனும் பகுதி செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், நிலத்துக்கு மேல் 121.92 சென்ரிமீற்றர் உயரத்தில், அத்தகைய இடப்பரப்பில் நடுகை செய்யப்பட்ட இறப்பர் கன்றுகளின் குறைந்தபட்ச சுற்றுவட்ட எல்லையைக் கொண்ட இறப்பர் கன்றுகள் பின்வருமாறிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுப்பது அவரது கடமையாதல் வேண்டும் :-

(அ) அத்தகைய இடப்பரப்பு 254 சென்ரிமீற்றர்களும் அதற்கு மேற்பட்டதுமான சராசரி வருடாந்த மழை வீழ்ச்சியைக் கொண்ட ஒரு மாவட்டத்தில் அமைந்திருக்குமிடத்து கீழே பட்டியல் I இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும் :-

பட்டியல் I

| பெருந்தோட்டம் உளதாயுள்ள காலம் | சுற்றளவு (செமீ) |
|---|---|
| புதிய நடுகைக்குப் பின்னர் இரண்டாவது ஆண்டின் முடிவில் | 10.16 |
| புதிய நடுகைக்குப் பின்னர் மூன்றாவது ஆண்டின் முடிவில் | 15.87 |
| புதிய நடுகைக்குப் பின்னர் நான்காவது ஆண்டின் முடிவில் | 25.40 |
| புதிய நடுகைக்குப் பின்னர் ஐந்தாவது ஆண்டின் முடிவில் | 31.75 |
| புதிய நடுகைக்குப் பின்னர் ஏழாவது ஆண்டின் முடிவுக்குப் பிந்தாமல் | 50.80 |

(ஆ) அத்தகைய இடப்பரப்பு 254 சென்ரிமீற்றர்களுக்குக் குறைவான சராசரி வருடாந்த மழை வீழ்ச்சியைக் கொண்ட ஒரு மாவட்டத்தில் அமைந்திருக்குமிடத்து, கீழே பட்டியல் II இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும் :-

பட்டியல் II

| பெருந்தோட்டம் உளதாயுள்ள காலம் | சுற்றளவு (செமீ) |
|---|---|
| புதிய நடுகைக்குப் பின்னர் இரண்டாவது ஆண்டின் முடிவில் | 10.16 |
| புதிய நடுகைக்குப் பின்னர் மூன்றாவது ஆண்டின் முடிவில் | 13.97 |
| புதிய நடுகைக்குப் பின்னர் நான்காவது ஆண்டின் முடிவில் | 22.86 |
| புதிய நடுகைக்குப் பின்னர் ஐந்தாவது ஆண்டின் முடிவில் | 27.94 |
| புதிய நடுகைக்குப் பின்னர் எட்டாவது ஆண்டின் முடிவுக்குப் பிந்தாமல் | 50.80 |

18. ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில் ஒரு மானியத்தை முழுமையாக அல்லது அதன் ஏதேனும் பகுதியைப் பெறுகின்றவராகவுள்ள அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் எவரும், இறப்பர் கன்றுகளின் ஆகக்குறைந்தது அறுபது சதவீதமேனும் (60%) நிலத்திலிருந்து அளவிடும்போது நூற்றியிருபத்தொன்று தசம் ஒன்பது இரண்டு (121.92) சென்ரிமீற்றர் உயரத்தில் குறைந்தபட்சம் ஐம்பது தசம் எட்டு சைபர் (50.80) சென்ரிமீற்றர்களைக் கொண்ட சுற்றளவை அடையும்வரை ஏதேனும் இறப்பர் கன்றிலிருந்து பாலை வெட்டுதலோ அல்லது பாலை வெட்டச் செய்தலோ ஆகாது.

19. எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு ஒழுங்குவிதி 5 இன்கீழ் மானியமொன்று செலுத்தப்படற்பாலதாகவுள்ளவிடத்து அல்லது செலுத்தப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், இறப்பர் கட்டுப்பாட்டாளர் எழுத்திலான அறிவித்தல் மூலம் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் ஓர் இறப்பர் தோட்டத்தை அல்லது இறப்பர் சிறுபற்று நிலத்தைத் திருப்திகரமான முறையில் புதிய நடுகை செய்வதனை நிறைவேற்றும் நோக்கத்துக்கு அவசியமென இறப்பர் கட்டுப்பாட்டாளர் கருதுகின்றவாறான அத்தகைய பணிப்புகளுக்கும் தேவைப்பாடுகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

20. எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் ஏதேனும் பகுதி செலுத்தப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒழுங்குவிதிகள் 12, 13, 14, 15, 16, 17 அல்லது 18 என்பவற்றை மீறியுள்ளாரென இறப்பர் கட்டுப்பாட்டாளர் அபிப்பிராயப்படுமிடத்து, இறப்பர் கட்டுப்பாட்டாளர், எழுத்திலான அறிவித்தல் மூலம், ஒன்றில் உடனடியாக அல்லது அறிவித்தலிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள் ஓர் இடப்பரப்புத் தொடர்பில் அவரினால் செலுத்தப்பட்டுள்ள மானியத் தொகையை மீளளிக்கும்படி அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரைத் தேவைப்படுத்தலாமென்பதுடன், இவ்வொழுங்கு விதியின்கீழ் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் எவரும் அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறுதலுமாகாது.

21. (1) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் செலுத்தப்பட்ட மானியத்தை மீளச்செலுத்துவதற்கு எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் தவறும் போதெல்லாம், அத்தகைய பணத்தொகை, ஒரு சட்ட நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்று என்றாற்போன்று அறவிடப்படுதல் வேண்டும்.

(2) ஆளொருவர், மானியத்தின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைப் பணங்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அத்தகைய மானியத்தை மீளச்செலுத்துவதற்குத் தவறியுள்ளதுடன், ஓர் இறப்பர் தோட்டத்தை அல்லது இறப்பர் சிறுபற்று நிலத்தைக் கைவிட்டுள்ளாரென்ற பொருள்பட இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றைச் சமர்ப்பித்தலானது அத்தகைய நிகழ்வு பற்றி இது தொடர்பான முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.

22. காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறாக 1977 ஆம் ஆண்டு மாச்சு 23 ஆந் திகதிய 258 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இறப்பர் புதிய நடுகை மானிய ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், முறையே 2013, 2014, 2015, 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகள் தொடர்பில் வழங்கப்பட்ட எவையேனும் புதிய நடுகை அனுமதிப்பத்திரங்களின் மீது செலுத்தப்படற்பாலதான மானியத்தின் பின்வரும் தவணைப் பணங்கள் மற்றும் அத்தகைய அனுமதிப்பத்திரங்களின் மீது வருமதியாகவுள்ள எல்லாத் தவணைப் பணங்களும் இவ்வொழுங்குவிதிகள் நடைமுறையிலிருக்கும் நேரத்தில் செலுத்தப்பட்டிராதவிடத்து, அத்தகைய தவணைப் பணங்கள் பின்வரும் முறையில் ஒழுங்குவிதி 5 இல் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் செலுத்தப்படுதல் வேண்டும் :-

2013 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(ஏ) இன் நியதிகளின்படி எட்டாவது தவணைப்பணம் ;
2014 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(எ) இன் நியதிகளின்படி ஏழாவது தவணைப்பணத்திலிருந்து ;
2015 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(ஊ) இன் நியதிகளின்படி ஆறாவது தவணைப்பணத்திலிருந்து ;
2016 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(உ) இன் நியதிகளின்படி ஐந்தாவது தவணைப்பணத்திலிருந்து ;
2017 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(ஈ) இன் நியதிகளின்படி நான்காவது தவணைப்பணத்திலிருந்து ;
2018 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(இ) இன் நியதிகளின்படி மூன்றாவது தவணைப்பணத்திலிருந்து ;
2019 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(அ) மற்றும் 5(ஆ) இன் நியதிகளின்படி முதலாவது மற்றும் இரண்டாவது தவணைப்பணத்திலிருந்து.

23. இவ்வொழுங்குவிதிகளில் :-

"உரிமையாளர்" என்பது, (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"தோட்டம்" என்பது, (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"புதிய நடுகை அனுமதிப்பத்திரங்கள்" என்பது, இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரம் என்று பொருளாகும் ; அத்துடன்

"சிறு பற்றுநிலங்கள்" என்பது, இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்

"இறப்பர் கட்டுப்பாட்டாளர்" என்பது, (437 ஆம் அத்தியாயமான) இறப்பர் புதிய நடுகை மானியச் சட்டத்தின் கீழான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

09-40/ 2

---

ச. வ. பி. 51/ 53 (III)

## இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டம் (437 ஆம் அத்தியாயம்)

(437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் தென்னை, கித்துல், பனை மற்றும் செய்கை மேம்பாடு மற்றும் அதுசார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**ரமேஷ் பத்திரன,**
பெருந்தோட்ட அமைச்சர்.

கொழும்பு,
2021, ஓகத்து 06.

**ஒழுங்குவிதிகள்**

*1. இவ்வொழுங்குவிதிகள் 2021 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க இறப்பர் மீள்நடுகை (பெருந்தோட்டக் கம்பெனிகள்) மானிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

*2. (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளவரான (இதனகத்துப்பின்னர் "அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இறப்பர் தோட்டமொன்றின் எவரேனும் உரிமையாளர், அத்தகைய தோட்டத்தில் இறப்பர் கன்றுகளின் மீள்நடுகைக்கான மானியமொன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக இறப்பர் கட்டுப்பாட்டாளருக்கு எழுத்தில் விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்கலாம்.*

*3. இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் மானியமொன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும்.*

*4. இறப்பர் கட்டுப்பாட்டாளர், அத்தகைய விண்ணப்பம் பெறப்பட்டதன் மேல், (437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இறப்பர் மீள்நடுகை மானிய நிதியத்திலிருந்தும் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் விண்ணப்பதாரருக்கு மானியமொன்றை வழங்கலாம்.*

*5. புறநீங்கலாகத் தனியார் சொத்தாண்மையில் உள்ளதாக 2019 ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பின்னரான காலம் தொடர்பில் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட மீள்நடுவை அனுமதிப்பத்திரங்களின் மீது ஓர் இறப்பர் தோட்டத்தின் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பாகத்தில் இறப்பரின் மீள்நடுகைக்காகச் செலுத்தப்படற்பாலதான மானியத் தொகையானது, மீள்நடுகை செய்யப்பட வேண்டிய இடப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் முந்நூற்றைம்பதாயிரம் ரூபாவாக (ரூ. 350,000) இருத்தல் வேண்டுமென்பதுடன் பின்வரும் முறையில் எட்டுத் தவணைப் பணங்களில் செலுத்தப்படுதலும் வேண்டும் :-*

*(அ)* (i) *ஓர் இடப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் பதினாறாயிரம் ரூபாவான (ரூ. 16,000) முதலாவது தவணைப்பணம், அத்தகைய இடப்பரப்பில் ஏலவேயுள்ள இறப்பர் மரங்களும் ஏனைய பயிரினங்களும் அடியோடு அழிக்கப்பட்ட பின்னர் செலுத்தப்படுதல் வேண்டும் ;*

(ii) *அத்தகைய காணியின் மீது ஏலவேயுள்ள இறப்பர் மரங்களையும் ஏனைய பயிரினங்களையும் அடியோடு அழித்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டதன் மீது இறப்பர் கட்டுப்பாட்டாளர், அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குப் பகுதியளவிலான கொடுப்பனவொன்றாக முதலாவது தவணைப் பணத்தின் ஐம்பது சதவீதத்தை (50%) விஞ்சாத தொகையொன்றைச் செலுத்தலாம் ;*

*(ஆ)* (i) *ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் எண்பத்தாறாயிரம் ரூபாவான (ரூ. 86,000) இரண்டாவது தவணைப் பணம், இறப்பர் கன்றுகளின் மீள்நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் செலுத்தப்படுதல் வேண்டும் ;*

(ii) *மீள்நடுகை பூர்த்திசெய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டதன் மீது இறப்பர் கட்டுப்பாட்டாளர், அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குப் பகுதியளவிலான கொடுப்பனவொன்றாக இரண்டாவது தவணைப் பணத்தின் ஐம்பது சதவீதத்தை (50%) விஞ்சாத பணத்தொகையொன்றைக் கொடுப்பனவு செய்யலாம் ;*

(iii) *அத்தகைய தவணைப் பணத்தைக் கொடுப்பனவு செய்வதற்கான தேவைப்பாடு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை எனப் பரிசோதனையின் மீது காணப்படுமிடத்து, பின்வரும் செயற்பாடுகளைப் பின்வரும் முறையில் திருப்திகரமான முறையில் பூர்த்திசெய்யப்பட்ட பின்வரும் செயற்பாடுகளுக்கான அத்தகைய கொடுப்பனவு பின்வரும் முறையில் செய்யப்படுதல் வேண்டும் :-*

| | *பூர்த்திசெய்யப்பட வேண்டிய செயற்பாடுகள்* | *ஒரு ஹெக்டயாருக்கான மானியம்*<br>*ரூ. ச.* |
|---|---|---|
| *1.* | குழிகளைத் தோண்டுதலும் ஒட்டவைக்கப்பட்ட இறப்பர் கன்றுகளை நடுதலும் | *50,000* |
| *2.* | மண்பேணல் (வடிகால்களை அகழ்தல் அல்லது மேடைகளை அல்லது கல் படிக்கட்டுகளை நிர்மாணித்தல் அல்லது மூடு பயிர்களை நடுதல் முதலியன) | *20,000* |
| *3.* | வேலியடைத்தல் | *16,000* |

(iv) ஏதேனும் மீதிப் பணத்தொகையின் கொடுப்பனவானது, கவனத்திலெடுக்கப்படாத செயற்பாடுகள் திருப்திகரமாகப் பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும் ;

(v) அத்தகைய தேவைப்பட்ட செயற்பாடு பூர்த்தி செய்யப்படும்வரை, அடுத்துப் பின்னரான தவணைப் பணத்தின் கொடுப்பனவு இடைநிறுத்தப்படுதல் வேண்டும் ;

(இ) ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் முப்பதாயிரம் ரூபாவான (ரூ. 30,000) மூன்றாவது தவணைப்பணம், மீள்நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் ஓராண்டுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஈ) ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் நாற்பத்திரண்டாயிரம் ரூபாவான (ரூ. 42,000) நான்காவது தவணைப்பணம், மீள்நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் இரண்டாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(உ) ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் நாற்பத்திரண்டாயிரம் ரூபாவான (ரூ. 42,000) ஐந்தாவது தவணைப் பணம், மீள்நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் மூன்றாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஊ) ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் நாற்பத்திரண்டாயிரம் ரூபாவான (ரூ. 42,000) ஆறாவது தவணைப்பணம், மீள்நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் நான்காண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(எ) ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் நாற்பத்துநான்காயிரம் ரூபாவான (ரூ. 44,000) ஏழாவது தவணைப் பணம், மீள்நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் ஐந்தாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஏ) ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் நாற்பத்தெட்டாயிரம் ரூபாவான (ரூ. 48,000) எட்டாவது தவணைப்பணம், மீள்நடுகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் ஆறாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும்.

6. ஒழுங்குவிதி 5 இன் பந்திகள் (இ) முதல் (ஏ) வரையில் குறித்துரைக்கப்பட்ட முன்னேற்றம் அவற்றின்கண் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிகளுக்கு முன்னர் எய்தப்பட்டுள்ளதென இறப்பர் கட்டுப்பாட்டாளர் திருப்திப்படுமிடத்து, இறப்பர் கட்டுப்பாட்டாளர் அவரது தற்றுணிபின் பேரில் குறிப்பிட்ட தவணைப்பணத்தை முந்தியவொரு திகதியில் விடுவிக்கலாம்.

7. ஒழுங்குவிதி 17 இன் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளுக்கிணங்கவல்லாது மானியத்தின் தவணைப் பணமெதுவும், அத்தகைய துப்புரவாக்கப்பட்ட காணியில் மீள்நடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அல்லது இறப்பர் பாலை வெட்டுதல் தொடங்கப்பட்ட பின்னர் ஏழாண்டுகளுக்குப் பிந்திச் செலுத்தப்படலாகாது.

8. ஒரு நிலத்தில் மரங்கள் எத்திகதியன்று நடப்பட்டனவோ அத்திகதி மீள்நடுகைத் திகதியாகக் கருதப்படுதல் வேண்டும்.

9. மீள்நடுகை செய்யப்பட வேண்டிய இடப்பரப்பு பரப்பளவில் இது ஹெக்டயாருக்குக் குறைவாகவுள்ளவிடத்து அல்லது அத்தகைய இடப்பரப்பு ஒரு ஹெக்டயாருக்குக் குறைவாகவுள்ள பாகமொன்றை உள்ளடக்குமிடத்து, ஒழுங்குவிதி 5 இல் குறித்துரைக்கப்பட்ட தொகைகள், செலுத்தப்படற்பாலதான மானியத் தொகையைக் கணிக்கையில், அப்பரப்பளவு அல்லது இடப்பரப்பின் பாகம் ஒரு ஹெக்டயாருக்கு எந்த விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அந்த விகிதாசாரத்தில் அப்பரப்பளவு அல்லது பாகம் தொடர்பில் செலுத்தப்படுதல் வேண்டும்.

10. நிலத்துக்கு மேல் நூற்றிருபத்தொன்று தசம் ஒன்பது இரண்டு (121.92) சென்ரிமீற்றர் உயரத்தில், சுற்றுவட்ட எல்லையில் ஐம்பது தசம் எட்டு சைபர் (50.80) சென்ரி மீற்றர்களைக் கொண்ட குறைந்தபட்ச சுற்றளவை அடைந்துள்ளதாக மீள்நடுகையிலிருந்து ஐந்தாவதாண்டின் முடிவில் ஒரு ஹெக்டயாருக்குத் தேவைப்பட்ட மரங்களின் எண்ணிக்கையிலிருந்து குறைந்தபட்சம் 2/ 3 பங்கினவான மரங்களைக் கொண்ட ஓர் இறப்பர் தோட்டத்தை மீள் நடுகை செய்வதற்காக மற்றும் அப்பொருள்பட இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரிடமிருந்து சான்றிதழொன்றைப் பெற்றதன் மீது ஒரு ஹெக்டயாருக்குப் பதினான்காயிரம் ரூவாவான (ரூ. 14,000) ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்று இறப்பர் தோட்டமொன்றின் உரிமையாளருக்குச் செலுத்தப்படலாம்.

11. ஏதேனும் காணியின் மீது இறப்பரை மீள்நடுகை செய்வதற்கான அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், வழங்கப்பட்டுள்ளவரான ஓர் இறப்பர் தோட்டத்தின் எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், மானியத் தவணைப் பணங்களைக் கொடுப்பனவு செய்யும் மற்றும் மானியக் கொடுப்பனவுகளின் தவணைப் பணங்களை அறவிடும் நோக்கத்துக்காக அரசாங்க வங்கியின் அல்லது ஏதேனும் தனியார் வர்த்தக வங்கியின் ஒரு கிளையில், ஒன்றில் நடப்புக் கணக்கொன்றை அல்லது சேமிப்புக் கணக்கொன்றைத் திறத்தலும் பேணுதலும் வேண்டும்.

*12.* ஒழுங்குவிதி 5 இன் கீழ் மானியத்தின் முதலாவது தவணைப் பணம் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குச் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், ஒழுங்குவிதி 19 இன்கீழ் எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கும் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் இணங்கியொழுகுவதும் மற்றும் மீள்நடுகை செய்யப்பட்ட இடப்பரப்பைச் சிறந்த கமத்தொழில்சார் நிலைமையில் பேணுவதும் அவரது கடமையாதல் வேண்டும்.

*13.* எந்தவோர் இடப்பரப்புக்காக மீள்நடுகை அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்தவோர் இடப்பரப்புத் தொடர்பில் ஒழுங்குவிதி 5 இன்கீழ் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மானியத் தவணைப் பணங்கள் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு வருமதியாகவுள்ளனவோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், இறப்பர் கட்டுப்பாட்டாளரின் எழுத்திலான அங்கீகாரமின்றி அத்தகைய இடப்பரப்பின் பாகத்தை அல்லது அது முழுவதனையும் விற்பனை செய்தலோ அல்லது வேறு வகையில் கையுதிர்த்தலோ ஆகாது.

*14.* ஒழுங்குவிதி 5 இன்கீழ் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்றின் முதலாவது தவணைப்பணம் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த ஓர் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், அத்தகைய தவணைப்பணம் செலுத்தப்பட்ட திகதியிலிருந்து ஓராண்டினுள் அல்லது இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அதற்கென வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய மேலதிகக் காலத்தினுள்–

(அ) இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய வகையை அல்லது வகைகளைச் சேர்ந்த இறப்பர் கன்றுகளுடன் அத்தகைய இடப்பரப்பின் மீள்நடுகையைப் பூர்த்திசெய்தல் வேண்டும் ;

(ஆ) இறப்பர் மற்றும் பயற்றின நெற்று நில மூடுகன்றுகள் தவிர்ந்த எல்லாக் கன்றுகளையும் அகற்றும்படி இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் எழுத்திலான அறிவித்தல் மூலம் தேவைப்படுத்தப்படும்போது அவ்வாறு செய்தல் வேண்டும் ;

(இ) எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய வடிகால்களை அல்லது படிக்கட்டுகளை அத்தகைய இடப்பரப்பில் நிர்மாணித்தல் வேண்டும் ;

(ஈ) எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளர் தேவைப்படுத்தக்கூடியவாறாக, அத்தகைய இடப்பரப்பில் பயற்றின நெற்று மூடுபயிர்களை நடுதல் வேண்டும் அல்லது அத்தகைய இடப்பரப்பில் மண் அரிப்பைத் தடுப்பதற்காகத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய வேறு வழிமுறைகளை எடுத்தல் வேண்டும் ; அத்துடன்

(உ) அத்தகைய இடப்பரப்பைச் சுற்றி வேலியொன்றை நிர்மாணிக்கும்படி இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் எழுத்திலான அறிவித்தல் மூலம் கோரப்படின் அவ்வாறு செய்தல் வேண்டும்.

*15. (1)* ஒழுங்குவிதி 14 இல் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் வேலையானது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரினால் நிறைவேற்றப்படாதிருக்குமிடத்து, அத்தகைய வேலையைப் பூர்த்திசெய்வதற்கு அவசியமென இறப்பர் கட்டுப்பாட்டாளர் கருதக்கூடியவாறான ஆட்களை இறப்பர் கட்டுப்பாட்டாளர் தொழிலுக்கமர்த்தலாம் மற்றும் தேவைப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தலாம்.

*(2)* இறப்பர் கட்டுப்பாட்டாளர், அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குச் செலுத்தப்படற்பாலனவான மானியங்களிலிருந்து அது சம்பந்தமாக ஏற்பட்ட செலவுகளைக் கழித்தல் வேண்டும்.

*16.* ஒரு காணிப்பரப்புத் தொடர்பில் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் பகுதியொன்று செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், அந்த இடப்பரப்பிலுள்ள ஒவ்வொரு ஹெக்டயாரிலும் மீள்நடுகை செய்யப்படவுள்ள இறப்பர் கன்றுகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை பின்வரும் தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுகுதல் வேண்டுமென்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும் :-

(அ) (i) (இதனகத்துப்பின்னர் "இஇஆநி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தின் RRIC, RRISL வகையினவான இறப்பர் குளோன்களுடனும் மற்றும் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அங்கீகரிக்கப்பட்ட அதிக அறுவடை தரும் ஏனைய ஒட்டுரக இறப்பர் கன்றுகளின் வகைகளுடனும் நடப்படின், மீள்நடுகை செய்யப்பட்ட நேரத்தில் ஒரு ஹெக்டாயருக்கு 516 கன்றுகள் ;

(ii) மீள்நடுகைக்குப் பின்னர் முதலாவது மற்றும் இரண்டாவது ஆண்டுகளின் முடிவில் ஒரு ஹெக்டயாருக்கு 516 கன்றுகள் ;

(iii) மீள்நடுகைக்குப் பின்னர் மூன்றாவது மற்றும் நான்காவது ஆண்டுகளின் முடிவில் ஒரு ஹெக்டயாருக்கு 475 கன்றுகள் ;

(iv) மீள்நடுகைக்குப் பின்னர் அடுத்த இரண்டு தொடர்ச்சியான ஆண்டுகளுக்காக ஒரு ஹெக்டயாருக்கு 450 கன்றுகள் ;

(v) ஒழுங்குவிதி 17 இன் (ஆ) என்னும் பந்தி தொடர்பாக மீள்நடுகைக்குப் பின்னர் அடுத்த மூன்று தொடர்ச்சியான ஆண்டுகளுக்காக ஒரு ஹெக்டயாருக்கு 450 கன்றுகள்.

(ஆ) ஒட்டவைக்கப்பட்ட இறப்பர் கன்றுகள் பின்வரும் தூரங்களிலும் குறித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையினவான கன்றுகளுடனும் நடப்படுதல் வேண்டும் :-

(i) இலங்கை ஆராய்ச்சி நிறுவகத்தின் குளோன்களுக்காகவும் (RRISL) மற்றும் அதிக அறுவடை தருபவையுமான ஏனைய குளோன்களுக்காகவும் :-

| கன்றுகளுக்கிடையேயான இடைவெளி | கன்றுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 350 செமீ x 550 செமீ (11'6'' x 18') | ஒரு ஹெக்டயாருக்கு 516 (ஓர் ஏக்கருக்கு 209) |
| 430 செமீ x 450 செமீ (14' x 14'9'') | ஒரு ஹெக்டயாருக்கு 516 (ஓர் ஏக்கருக்கு 209) |

(ii) RRIC, RRISL வகையினவான குளோன்களுடனும் மற்றும் அதிக அறுவடை தருபவையுமான ஏனைய குளோன்களுடனும் ஊடுபயிர்களைப் பயிரிடுவதற்காக :-

| கன்றுகளுக்கிடையேயான இடைவெளி | கன்றுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 250 செமீ x 775 செமீ (8' x 26') | ஒரு ஹெக்டயாருக்கு 516 (ஓர் ஏக்கருக்கு 209) |

(இ) இறப்பர் கட்டுப்பாட்டாளர், காணியின் இடத் தன்மையைக் கவனத்துட்கொண்டு, மேலே விதிக்கப்பட்டவை தவிர்ந்த வேறுபடத்தக்க இடைவெளிகளில் நடுவதற்கு அதிகாரமளிக்கலாம்.

ஆயின், கன்றுகளுக்கிடையேயான குறைந்தபட்ச இடைவெளி, இவ்வொழுங்குவிதியின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம், (ii) ஆம் உட்பந்திகளில் விதிக்கப்பட்ட எண்ணிக்கைகளுக்கு இசைந்தொழுகுதல் வேண்டும்.

17. ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு ஒரு மானியம் அல்லது அதன் ஏதேனும் பகுதி செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், நிலத்துக்கு மேல் 121.92 சென்ரிமீற்றர் உயரத்தில், அத்தகைய இடப்பரப்பில் மீள்நடுகை செய்யப்பட்ட இறப்பர் கன்றுகளின் குறைந்தபட்ச சுற்றுவட்ட எல்லையைக் கொண்ட இறப்பர் கன்றுகள் பின்வருமாறிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுப்பது அவரது கடமையாதல் வேண்டும் :-

(அ) அத்தகைய இடப்பரப்பு 254 சென்ரிமீற்றர்களும் அதற்கு மேற்பட்டதுமான சராசரி வருடாந்த மழை வீழ்ச்சியைக் கொண்ட ஒரு மாவட்டத்தில் அமைந்திருக்குமிடத்து கீழே பட்டியல் I இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும் :-

பட்டியல் I

| பெருந்தோட்டம் உளதாயுள்ள காலம் | சுற்றளவு (செமீ) |
|---|---|
| மீள்நடுகைக்குப் பின்னர் இரண்டாவது ஆண்டின் முடிவில் | 10.16 |
| மீள்நடுகைக்குப் பின்னர் மூன்றாவது ஆண்டின் முடிவில் | 15.87 |
| மீள்நடுகைக்குப் பின்னர் நான்காவது ஆண்டின் முடிவில் | 25.40 |
| மீள்நடுகைக்குப் பின்னர் ஐந்தாவது ஆண்டின் முடிவில் | 31.75 |
| மீள்நடுகைக்குப் பின்னர் ஏழாவது ஆண்டின் முடிவுக்குப் பிந்தாமல் | 50.80 |

(ஆ) அத்தகைய இடப்பரப்பு 254 சென்ரிமீற்றர்களுக்குக் குறைவான சராசரி வருடாந்த மழை வீழ்ச்சியைக் கொண்ட ஒரு மாவட்டத்தில் அமைந்திருக்குமிடத்து, கீழே பட்டியல் II இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும் :-

பட்டியல் II

| பெருந்தோட்டம் உளதாயுள்ள காலம் | சுற்றளவு (செமீ) |
|---|---|
| மீள்நடுகைக்குப் பின்னர் இரண்டாவது ஆண்டின் முடிவில் | 10.16 |
| மீள்நடுகைக்குப் பின்னர் மூன்றாவது ஆண்டின் முடிவில் | 13.97 |
| மீள்நடுகைக்குப் பின்னர் நான்காவது ஆண்டின் முடிவில் | 22.86 |
| மீள்நடுகைக்குப் பின்னர் ஐந்தாவது ஆண்டின் முடிவில் | 27.94 |
| மீள்நடுகைக்குப் பின்னர் எட்டாவது ஆண்டின் முடிவுக்குப் பிந்தாமல் | 50.80 |

18. ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில் ஒரு மானியத்தை முழுமையாக அல்லது அதன் ஏதேனும் பகுதியைப் பெறுகின்றவராகவுள்ள அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் எவரும், இறப்பர் கன்றுகளின் ஆகக்குறைந்தது அறுபது சதவீதமேனும் (60%) நிலத்திலிருந்து அளவிடும்போது நூற்றியிருபத்தொன்று தசம் ஒன்பது இரண்டு (121.92) சென்ரிமீற்றர் உயரத்தில் குறைந்தபட்சம் ஐம்பது தசம் எட்டு சைபர் (50.80) சென்ரிமீற்றர்களைக் கொண்ட சுற்றளவை அடையும்வரை ஏதேனும் இறப்பர் கன்றிலிருந்து பாலை வெட்டுதலோ அல்லது பாலை வெட்டச் செய்தலோ ஆகாது.

19. எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு ஒழுங்குவிதி 5 இன்கீழ் மானியமொன்று செலுத்தப் படற்பாலதாகவுள்ளவிடத்து அல்லது செலுத்தப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், இறப்பர் கட்டுப்பாட்டாளர் எழுத்திலான அறிவித்தல் மூலம் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் ஓர் இறப்பர் தோட்டத்தை அல்லது இறப்பர் சிறுபற்று நிலத்தைத் திருப்திகரமானவொரு முறையில் மீள்நடுகை செய்வதனை நிறைவேற்றும் நோக்கத்துக்கு அவசியமென இறப்பர் கட்டுப்பாட்டாளர் கருதுகின்றவாறான அத்தகைய பணிப்புகளுக்கும் தேவைப்பாடுகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

20. எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் ஏதேனும் பகுதி செலுத்தப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒழுங்குவிதிகள் 12, 13, 14, 15, 16, 17 அல்லது 18 என்பவற்றின் ஏற்பாடுகளை மீறியுள்ளாரென இறப்பர் கட்டுப்பாட்டாளர் அபிப்பிராயப்படுமிடத்து, இறப்பர் கட்டுப்பாட்டாளர், எழுத்திலான அறிவித்தல் மூலம், ஒன்றில் உடனடியாக அல்லது அறிவித்தலிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள் ஓர் இடப்பரப்புத் தொடர்பில் அவரினால் செலுத்தப்பட்டுள்ள மானியப் பணத்தொகையை மீளளிக்கும்படி அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரைத் தேவைப்படுத்தலாமென்பதுடன், இவ்வொழுங்கு விதியின்கீழ் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் எவரும் அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறுதலுமாகாது.

21. (1) மானியம் அல்லது வேறு மானியக்கொடைகள் என்றவகையாக எவரேனுமாளுக்கு இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் திட்டமொன்றின் கீழ் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகை மீளச்செலுத்தப்படாதுள்ள போதெல்லாம், அத்தகைய தொகைகள் ஒரு சட்ட நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்று என்றாற்போன்று அறவிடப்படுதல் வேண்டும்.

(2) ஆளொருவர், மானியத்தின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைப் பணங்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அத்தகைய மானியத்தை மீளச்செலுத்துவதற்குத் தவறியுள்ளதுடன், ஒரு தோட்டத்தைக் கைவிட்டுள்ளாரென்ற பொருள்பட இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றைச் சமர்ப்பித்தலானது அத்தகைய நிகழ்வு பற்றி முதற்றோற்றச் சான்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

22. காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறாக 1953 ஆம் ஆண்டு ஒற்றோபர் 13 ஆந் திகதிய 10594 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இறப்பர் மீள்நடுகை மானிய ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், முறையே 2013, 2014, 2015, 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட எவையேனும் மீள்நடுகை அனுமதிப்பத்திரங்களின் மீது செலுத்தப்படற்பாலதான மானியத்தின் பின்வரும் தவணைப் பணங்கள் மற்றும் அத்தகைய அனுமதிப்பத்திரங்களின் மீது வருமதியாகவுள்ள எல்லாத் தவணைப் பணங்களும் இவ்வொழுங்குவிதிகள் நடைமுறையிலிருக்கும் நேரத்தில் செலுத்தப்பட்டிராதவிடத்து, அத்தகைய தவணைப் பணங்கள் பின்வரும் முறையில் ஒழுங்குவிதி 5 இல் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் செலுத்தப்படுதல் வேண்டும் :-

2013 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(ஏ) இன் நியதிகளின்படி எட்டாவது தவணைப்பணம் ;
2014 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(எ) இன் நியதிகளின்படி ஏழாவது தவணைப்பணத்திலிருந்து ;
2015 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(ஊ) இன் நியதிகளின்படி ஆறாவது தவணைப்பணத்திலிருந்து ;

*2016 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(உ) இன் நியதிகளின்படி ஐந்தாவது தவணைப்பணத்திலிருந்து ;*

*2017 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(ஈ) இன் நியதிகளின்படி நான்காவது தவணைப்பணத்திலிருந்து ;*

*2018 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(இ) இன் நியதிகளின்படி மூன்றாவது தவணைப்பணத்திலிருந்து ;*

*2019 ஆம் ஆண்டு - ஒழுங்குவிதி 5(அ) மற்றும் 5(ஆ) இன் நியதிகளின்படி முதலாவது மற்றும் இரண்டாவது தவணைப்பணத்திலிருந்து.*

*23.* இவ்வொழுங்குவிதிகளில் :-

"*உரிமையாளர்*" என்பது, *(436 ஆம் அத்தியாயமான)* இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"தோட்டம்" என்பது, *(436 ஆம் அத்தியாயமான)* இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"*மீள்நடுகை அனுமதிப்பத்திரம்*" என்பது, *(436 ஆம் அத்தியாயமான)* இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் *7(1)* ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரம் என்று பொருளாகும் ; அத்துடன்

"*இறப்பர் கட்டுப்பாட்டாளர்*" என்பது, *(437 ஆம் அத்தியாயமான)* இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

*09-40/ 3*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*